# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள். 08.07.2026**

## முன்னிலை

## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 2712/F/2023**

திரு.வாராகி .. புகார்தாரர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர் /
அரசு சார்புச் செயலாளர்,
நிதித்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை-09. .. பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 08.07.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.வாராகி அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7(2)-ன்கீழ் மனுதாரர் ஆஜராக வேண்டுமென்பது அவசியமாகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர் திரு.து.பெரியதுரை, அரசு சார்புச் செயலாளர், நிதித்துறை, தலைமைச் செயலகம், சென்னை-09 அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் 22.06.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் தமிழக அரசின் 2006 முதல் மார்ச் 31.03.2023 வரையிலான வருடங்கள் வாரியாக தமிழக அரசின் ஒட்டு மொத்த கடன் தொகை எவ்வளவு என்பதனையும், மத்திய அரசிடம் பெற்ற தொகை வருடம் வாரியாகவும், உலக வங்கியிடம் பெற்ற தொகை வருட வாரியாகவும், எந்த எந்த துறையின் எவ்வளவு கடன் உள்ளது தொடர்பான அனைத்து ஆவணங்களையும் சான்றொப்பமிட்டு வழங்குவது தொடர்பாக தகவல்களைக் கோரியுள்ளார்.

3. அம்மனுவை பெற்ற பொதுத்தகவல் அலுவலர் 24.07.2023 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். இருப்பினும் மனுதாரர் தனக்கு சரியான தகவல் வழங்கவில்லை என மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, சட்டப்பிரிவு 18(1)ன் கீழ் 27.07.2023 நாளிட்ட புகார் மனுவினை

ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு (08.07.2026) இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத்தகவல் அலுவலர், மனுதாரரின் 22.06.2023 நாளிட்ட மனுவிற்கு 08.01.2026 நாளிட்ட கடிதங்கள் வழியாக தகவல் வழங்கியுள்ளதாக கூறி அதற்கான ஆவணங்கள் மற்றும் ஒப்புகை அட்டையின் நகல் ஆகியவற்றை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் பொதுத்தகவல் அலுவலரால் 08.01.2026 நாளிட்ட கடிதங்கள் வாயிலாக வழங்கப்பட்ட தகவல்களை உறுதி செய்து இவ்வாணையம் இப்புகார் மனுவின் மீதான விசாரணையை முற்றாக்கம் செய்து உத்தரவிடுகிறது.

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**
(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 2712/F/2023</u>**

**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**
பொதுத்தகவல் அலுவலர் /
அரசு சார்புச் செயலாளர்,
நிதித்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை-09.

**<u>மனுதாரர்</u>**
திரு.வாராகி,
2/3, சுதானந்த பாரதி தெரு,
கணபதிபுரம் கிழக்கு தாம்பரம்,
சென்னை-600059.

Copy to file: KR/PA